உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.359/–என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண் 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.3) துறை, நாள் 04.05.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000/– ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.78,29,790/– ஆகும்.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 45 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.359/– என மாவட்ட ஆட்சித்தலைவரின் செ.மு.ஆணை ந.க.எண் M3/16361/2019, நாள் 02.07.2017–ன்படி தினஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 116, நாள் 30.12.2019–ன்படி முறையே அனுமதி காலம் 29.12.2019 முதல் 25.03.2020 முடிய மற்றும் 23.12.2020 முதல் 19.03.2020 உடன் முடியவுள்ள நிலையில், (அ)–வில் குறிப்பிட்டுள்ள 645 பணியாளர்களுக்கு 28.03.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கும் (ஆ)–வில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு 22.03.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும், அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம், அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 156

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(எச்2/7560/98–மை.அ)

---

7) திருநெல்வேலி மாநகராட்சிக்கான உரிம இனங்களுக்கு அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.2009ன்படி 2019–2022 மூன்று ஆண்டு

காலத்திற்கு உரிமத்திற்கு விடும் வகைக்கு மேலப்பாளையம் மண்டல உரிம இனங்களுக்கு 13.02.2020 அன்று மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு, மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளில் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இனம் எண் 4 மேலப்பாளையம் மண்டலம் மீன் சந்தையில் உள்ள 8 மீன் கடைகளில் கடை எண் 2–ஐ தவிர மீதமுள்ள 7 கடைகளில் தரையில் அமர்ந்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 13–02–2020 அன்று நடைபெற்ற மறு ஏல / ஒப்பந்தப்புள்ளி விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

கடை எண் 1 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது அசனார், 15, புதுமனைத்தெரு வீரவநல்லூர் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/–க்கான வங்கி காசோலை எண்: 254520 நாள் 13.02.2020 | ரூ.20,100/– |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.முகம்மது அசனார் என்பவர் ரூ.20,100/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமான குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் இருந்துள்ளது.

எனவே திரு.முகம்மது அசனார் என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/– ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

கடை எண் 3 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.ஆறுமுகம் த/பெ ராமையா 8, திருவள்ளுவர் தெரு, மேலப்பாளைம் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/–க்கான வங்கி காசோலை எண்: 254521 நாள் 13.02.2020 | ரூ.21,000 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.ஆறுமுகம், த/பெ ராமையா என்பவர் ரூ.21,000/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.2500/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமான குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் இருந்துள்ளது.

எனவே திரு.ஆறுமுகம், த/பெ ராமையா என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.21,000/— ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

கடை எண்.4 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/—)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது அசனார், 15, புதுமனைத்தெரு வீரவநல்லூர் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/—க்கான வங்கி காசோலை எண்: 254522 நாள் 13.02.2020 | ரூ.21,000 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/— )

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.முகம்மது அசனார் என்பவர் ரூ.21,000/— என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.2500/— கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமான குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் இருந்துள்ளது.

எனவே திரு.முகம்மது அசனார் என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.21,000/— ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

கடை எண்.5 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/—)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.ஆறுமுகம் த/பெ வீரப்பத்தேவர் 11டீ, சாந்தமூர்த்தி தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/—க்கான வங்கி காசோலை எண்: 254523 நாள் 13.02.2020 | ரூ.20,100 |

ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/—)

ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் மட்டும் கலந்து கொண்டார்

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிதாரார் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தபுள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது சாலி 11 காட்டு செக்கு 2வது தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/—க்கான வங்கி காசோலை எண்: 844748 நாள் 12.02.2020 | ரூ.19,000 |

மீன் கடை எண்.5 க்கான ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.ஆறுமுகம் த/பெ வீரப்பத்தேவர் என்பவர் உச்ச ஏலக்கேள்வியாக ரூ.20,100/—க்கு கேட்டுள்ளார். மேற்படி கடைக்கான ஒப்பந்தபுள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.முகம்மது சாலி என்பவர் அளித்த ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.19000/— எனக் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி தொகையை காட்டிலும் ஏலத்தில் கலந்து கொண்ட திரு.ஆறுமுகம் த/பெ. வீரப்பத்தேவர் என்பவரின் உச்ச

ஏலக்கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/– கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திரு.ஆறுமுகம் த/பெ. வீரப்பத்தேவர் என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏலக்கேள்வி தொகையான ரூ.20,100/– ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

கடை எண்.6 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது அசனார், 15, புதுமனைத்தெரு வீரவநல்லூர் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/–க்கான வங்கி காசோலை எண்: 254524 நாள் 13.02.2020 | ரூ.22,000 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.முகம்மது அசனார் என்பவர் ரூ.22,200/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.3700/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமான குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் இருந்துள்ளது.

எனவே திரு.முகம்மது அசனார் என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.22,200/– ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

கடை எண்.7 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.ஆறுமுகம் த/பெ ராமையா 8, திருவள்ளுவர் தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/–க்கான வங்கி காசோலை எண்: 254525 நாள் 13.02.2020 | ரூ.20,100 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.ஆறுமுகம் த/பெ ராமையா என்பவர் ரூ.20,100/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமான குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் இருந்துள்ளது. ‘

எனவே திரு.ஆறுமுகம் த/பெ ராமையா என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/–ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

கடை எண்.8 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரா் பெயா் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது கனி, 65/10/1, பங்களப்பா நகர் 4வது தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 சேர்த்து ரூ.10,000/–க்கான வங்கி காசோலை எண்: 254526 நாள் 13.02.2020 | ரூ.20,100 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/–)

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.முகம்மதுகனி என்பவர் ரூ.20,100/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமான குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் இருந்துள்ளது.

எனவே திரு.முகம்மதுகனி என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/–ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

அலுவலக குறிப்பு :

பொருளில் காணும் விபரப்படி, இனம் எண் 4–ல் மேலப்பாளையம் மண்டல மீன் சந்தையில் அமைந்துள்ள 8 கடைகளில் 13–2–2020 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்கள் 1, 3, 4, 5, 6, 7 மற்றும் 8க்கு வரப்பெற்ற நிலையில்

கடை எண்.1 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார் திரு.முகம்மது அசனார் என்பவர் ரூ.20,100/– என உச்ச ஏலகேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.முகம்மது அசனார் என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/– ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

கடை எண்.3 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.ஆறுமுகம் த/பெ ராமையா என்பவர் ரூ.21,000/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.2500/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.ஆறுமுகம் த/பெ ராமையா என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.21,000/– ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

கடை எண்.4 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.முகம்மது அசனார் என்பவர் ரூ.21,000/– என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.2500/– கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.முகம்மது அசனார் என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.21,000/–ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

கடை எண்.5 ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.ஆறுமுகம், த/பெ வீரப்பத்தேவர் என்பவர் உச்ச ஏலக்கேள்வியாக ரூ.20,100/–க்கு கேட்டுள்ளார். மேற்படி கடைக்கான ஒப்பந்தபுள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.முகம்மதுசாலி என்பவர் அளித்த ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.19000/– எனக் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி தொகையை காட்டிலும் ஏலத்தில் கலந்து கொண்ட திரு.ஆறுமுகம், த/பெ. வீரப்பத்தேவர் என்பவரின் உச்ச ஏலக்கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/– கூடுதலாக

கேட்டுள்ளார் மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.ஆறுமுகம் த/பெ. வீரப்பத்தேவர் என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/—ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

கடை எண்.6 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.முகம்மது அசனார் என்பவர் ரூ.22,200/— என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.3700/— கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.முகம்மது அசனார் என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.22,200/— ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

கடை எண்.7 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.ஆறுமுகம் த/பெ ராமையா என்பவர் ரூ.20,100/— என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/— கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.ஆறுமுகம் த/பெ ராமையா என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/— ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

கடை எண்.8 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.முகம்மதுகனி என்பவர் ரூ.20,100/— என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1600/— கூடுதலாக கேட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டு காலமாக குறுமத் தொகை கூடுதலாக இருந்த நிலையில் ஏலம் ஏதும் விடப்படாமல் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் திரு.முகம்மதுகனி என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.20,100/—ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 157

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(அ1/10434/2018—மே.பா.)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி கல்லணை பெண்கள் மாநகராட்சி பள்ளியில் மொத்தம் 4500 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். மேற்படி பள்ளியின் மேற்கு பகுதி பிளாக்கில் மொத்தம் 56 வகுப்பறைகள் உள்ளன. இதில் 12 வகுப்பறைகள் ஆசிரியர்கள் ஓய்வறை, தலைமை ஆசிரியர் அறை மற்றும் ஆய்வக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 44 வகுப்பறைகளில் மாணவிகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி 44 வகுப்பறை கட்டிடங்கள் போதுமானதாக இல்லாத நிலையில் மீதமுள்ள வகுப்பறைகள் ஆடிட்டோரியம் தரைப்பகுதியிலும் மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகளில் தரைத்தளத்தில் உள்ள திறவிடங்களிலும் வகுப்புகள் நடத்தப்பட்டு மாணவிகள் தரையில் அமர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். எனவே கூடுதல் வகுப்பறைகள் கட்டி தருமாறு கல்லணை மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களால் கொடுக்கப்பட்ட கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே மாநகராட்சிப் பள்ளியில் கல்வி பயிலும் மாணவிகளின் நலன் கருதியும், ஆசிரியர்களின் நலன் கருதியும், மேற்படி கல்லணை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் கிழக்கு வரிசையில் இரண்டாவது தளத்தில் புதிதாக 3 (மூன்று எண்ணம்) வகுப்பறைகள் கல்வி நிதியில் இருந்து கட்டுவதற்கும், அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.31.00 (முப்பத்தி ஒன்று) இலட்சத்திற்கு மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக குறிப்பு

பொருளில் கண்டவாறு திருநெல்வேலி மாநகராட்சி கல்லணை பெண்கள் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கான 44 வகுப்பறை கட்டிடங்கள் போதுமானதாக இல்லாத நிலையில் ஆடிட்டோரியம் தரைப்பகுதியிலும் மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகளில் தரைத்தளத்தில் உள்ள திறவிடங்களிலும் வகுப்புகள் நடத்தப்பட்டு மாணவிகள் தரையில் அமர்ந்து கல்வி பயின்று வருவதால் மாணவிகளின் நலன் கருதியும், ஆசிரியர்களின் நலன் கருதியும் மேற்படி கல்லணை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் கிழக்கு வரிசையில் இரண்டாவது தளத்தில் புதிதாக 3 (மூன்று எண்ணம்) வகுப்பறைகள் கல்விநிதியில் இருந்து கட்டுவதற்கும் அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.31.00 (முப்பத்தி ஒன்று) இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 158

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மதிப்பீடு எண் 98/2019–20–திலி)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலப் பகுதிகளில் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு மாதாந்திர மின்கட்டணம் பள்ளிகளின் நிர்வாகத்திலிருந்து செலுத்தப்பட்டு வருகின்றது. தற்போது கீழ்க்கண்ட பள்ளிகளில் நிதி நெருக்கடி காரணமாக மாநகராட்சி மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கட்டணம் செலுத்த கீழ்க்கண்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்களது 20.02.2020, 17.02.2020 மற்றும் 20.02.2020ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேற்படி பள்ளிகளில் மின்கட்டண நிலுவை விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மின்இணைப்பு எண் | மின்கட்டண நிலுவைத் தொகை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| 1 | ராணி அண்ணா மாநகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளி பேட்டை | 009–006–372<br>009–006–142 | 17228<br>19389 | 36617 |
| 2 | காமராஜர் மேல்நிலைப்பள்ளி | 009–008–52<br>009–008–53<br>009–008–54<br>009–008–55<br>009–018–900 | 9998<br>960<br>1322<br>11152<br>4283 | 27715 |
| 3 | டவுண் பாரதியார் உயர்நிலைப் பள்ளி | 006–216–22 | மின் கட்டணம் நிலுவையில்லை | |
| | மொத்தம் | | | 64332 |

மேற்கண்ட விபரப்படி மின்சார கட்டணம் நிலுவைத் தொகை ரூ.64,332/–ஐ மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்தவும், மேலும் இனிவருங்காலங்களில் மாதாந்திர மின்கட்டணத் தொகையினையும், மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்துவதற்கும், மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

அலுவலகக் குறிப்பு

பொருளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மாணவ, மாணவிகளின் நலன் கருதி மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருவதால் மேற்படி மின்சார கட்டண நிலுவை தொகை ரூ.64,332/–ம் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்தவும், மேலும் இனிவருங்காலங்களில் மாதாந்திர மின்கட்டணத் தொகையினையும் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்துவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 159

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(கோப்பு எண் இ1 /514/2020–திலி)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, பெருமாள்புரம் ரயில்வே கேட் பகுதியிலிருந்து பெருமாள்புரம் 7வது மெயின் ரோடு வரை உள்ள பகுதியை இணைக்கும் பிரதான சாலையில் இரவில் போதிய வெளிச்சம் இல்லாததால் அப்பகுதியில் சமூக விரோத செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதால், அப்பகுதியில் மக்கள் நடமாட அச்சம் தெரிவித்து புகார் செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதியில் இருளை நீக்கும் பொருட்டு 2 எண்ணம் 7 mEGI மின்கம்பங்களை நிறுவி 2 எண்ணம் 60 W LED தெருவிளக்கு பொருத்தவும், மேலும் இப்பிரதான சாலையில் ஏற்கனவே அமைந்துள்ள 19 எண்ணம் மின்கம்பங்களில் ஏற்கனவே ஒளிர்ந்து வரும் 20 W LED விளக்குகளை நீக்கி புதிய 60 W LED தெருவிளக்குகள் பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) செலவினம் மாமன்றம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் மொத்தம் 21 எண்ணம் 60 W LED தெருவிளக்கு பொருத்தவும் 2 எண்ணம் 7 mEGI மின்கம்பங்கள் நிறுவவும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2,00,000/– (இரண்டு லட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 160

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/1472/2020–திலி)

---

11) திருநெல்வேலி மாநகராட்சியில், தச்சநல்லூர் மண்டல மதுரை ரோடு வேன் ஸ்டாண்டில் நிறுத்தப்படும் வேன்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க திரு.முத்துகிருஷ்ணன் என்பவரால் 21.09.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட மதுரை ரோடு வேன் ஸ்டாண்டில் நிறுத்தப்படும் வேன்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2016–2019 முடிய உள்ள ஆண்டுகளுக்கு திரு.முத்துகிருஷ்ணன் என்பவரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை தச்சநல்லூர் மண்டல அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2014–2015 பக்கம் 16 மற்றும் 17–ல் இருப்பில் உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)–ன்படியும், 2018–2019ம் ஆண்டு தணிக்கை முடிவு பெறாத நிலையில் வைப்புத் தொகை ரூ.18000/–ல் 40 விழுக்காடு தொகை பிடித்தம் செய்து ரூ.10800/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.18000/– ஆக மொத்தம் ரூ.28800/– உரிமதாரர் திரு.முத்துகிருஷ்ணன் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 161

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் அ1/5545/2019–தச்சை)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட ராஜாஜிபுரம், சங்கரன்கோவில் ரோடு கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கப்படும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு, 14.02.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.சு.மகாதேவர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.20,700/– கேட்டுள்ளார். எனவே மேற்படி உரிம இனத்திற்கு அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.2009–ன்படி மேற்படி உரிம இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 14.02.202 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட ராஜாஜிபுரம், சங்கரன்கோவில் ரோடு கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு.சு.மகாதேவர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.20,700/– கேட்டுள்ளார். மாநகராட்சி வார்டு பகுதிகளில் உள்ளூர் மக்களின் பயன்பாட்டிற்கென மேற்கண்ட கழிப்பிடமானது கட்டப்பட்டு, பொது கழிப்பிடமாக (Public Toilet) பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் இக்கழிப்பிடத்தின் பராமரிப்பு கருதி கடந்த 2017–ம் ஆண்டில் குறைந்த அளவு குறுமத் தொகை ரூ.2500/– என நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உரிமம் வழங்கப்பட்டது. உள்ளூர் பகுதி மக்களே இதனை பயன்படுத்துவதாலும், தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குடியிருப்புகளில் தனிநபர் கழிப்பிடங்கள் அதிகளவில் கட்டப்பட்டுள்ளதாலும், இக்கழிப்பிட கட்டிடங்களை பாதுகாத்து பராமரிக்கும் நோக்கில், இவ்வினத்திற்கு தற்போது திரு.சு.மகாதேவன் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.20700/–ஐ ஏற்று அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.2009–ன்படி மேற்படி உரிம இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 162

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் அ1/5689/2018–தச்சை)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளின் கல்வி மற்றும் பொது அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு மேற்படி பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில நாளிதழ்கள் வழங்க மேற்படி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் 27.01.2020ம் தேதிய கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

எனவே இம்மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு மாணவ/மாணவிகள் பயன்பெறும் வகையில் வாராந்திர ஆங்கில நாளிதழும் மற்றும் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு முடிய பயிலும் மாணவ/மாணவிகள் பயன்பெறும் வகையில் ஆங்கில தினசரி நாளிதழும் பள்ளி இயங்கும் நாட்களில் விநியோகம் செய்திட விருப்பத்தினை தெரிவிக்கக் கேட்டு EOI 05.02.2020–ல் கோரப்பட்டது. இதில் The Hindu நாளிதழ் நிறுவனத்தினரிடமிருந்து EOI 10.02.2020–ல் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு

| வ. எண் | வாராந்திர ஆங்கில நாளிதழ் மற்றும் தினசரி ஆங்கில நாளிதழ் விபரம் | மாணவர் களின் எண்ணிக்கை | நாளிதழ்கள் எண்ணிக்கை | விநியோகம் செய்யப்படும் நாளிதழ் ஒன்றின் விலை | விநியோகம் செய்யப்படும் நாட்கள் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | The Hindu Young World (வாராந்திர ஆங்கில நாளிதழ்) (6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை) | 2607 | 532 | ரூ.10/- | 45 days | ரூ.2,39,400/- |
| 2 | The Hindu in School (தினசரி ஆங்கில நாளிதழ்) (9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை) | 4007 | 405 | ரூ.5/- | 200 | ரூ.4,05,000/- |

மேற்கண்ட அட்டவணையின்படி தினசரி ஆங்கில நாளிதழ்கள் மற்றும் வாராந்திர ஆங்கில நாளிதழ்களை விநியோகம் செய்யவும், அதற்கான செலவு தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வது குறித்தும் மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க பொருளில் காணும் விரபப்படி திருநெல்வேலி மாநகராட்சி பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வாராந்திர ஆங்கில நாளிதழ்களும் (The Hindu Young World) மற்றும் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தினசரி ஆங்கில நாளிதழ்களும் (The Hindu in School) பள்ளி இயங்கும் நாட்களில் மட்டும் 01.03.2020 முதல் ஒரு ஆண்டிற்கு விநியோகம் செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.6,44,400/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் ஆணையாளார் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 163

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(பி1/1537/2019-திலி)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்கள், மாண்புமிகு மேயர், பாளையங்கோட்டை வ.உ.சி.மைதானம் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர், ஆணையாளர் ஆகியோர்களின் குடியிருப்புகளில் முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக்கழகம் (டெக்ஸ்கோ) மூலம் 18 பாதுகாபப்பு பணியாளர்கள் மற்றும் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் நியமிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர்கள் பேருந்து நிலைய பாதுகாப்புப் பணி, கடை வாடகை வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணி 25 டெக்ஸ்கோ பாதுகாப்பு பணியாளர்களும் ஆக மொத்தம் கீழ்க்கண்ட பட்டியலில் கண்ட விபரப்படி 43 பணியாளர்களை மாமன்றத் தீர்மானம் எண் 6, நாள் 07.06.2019-ன்படி 01.04.2019 முதல் 31.03.2020 வரை பணியில் அமர்த்திக்கொள்ளவும், அதற்குரிய ஊதியம் வழங்கவும் அனுமதி பெறப்பட்டது.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 1 | 19402/– மற்றும் சேவைக் கட்டணம் 12% சேவை வரி 18% |
| 2 | பாதுகாவலர் | 18 + 18 | 16639/– மற்றும் சேவைக் கட்டணம் 12 % சேவை வரி 18% |
| 3 | பாதுகாவலர் வாகன காப்பகம் | 3 | 16639/– மற்றும் சேவைக் கட்டணம்12% சேவை வரி 18% |
| 4 | இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் | 3 | 19402/– மற்றும் சேவைக் கட்டணம் 12% சேவை வரி 18% |

மேற்படி 43 டெக்ஸ்கோ பணியாளர்களையும் அவசியம் கருதி 01.04.2020 முதல் 31.03.2021 முடிய மேலும் ஒரு வருட காலத்திற்கு மேற்காணும் பட்டியலில் கண்ட ஊதிய விபரப்படி தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்கான ஊதிய செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 43 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 01.04.2020 முதல் 31.03.2021 முடிய உள்ள ஒரு வருடத்திற்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான ஊதிய செலவுகளுக்கும், அவ்வப்போது அரசால் உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் 2020–2021 வரவு செலவுத் திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 164

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(சி3/8109/2018)